செ.வெ.எண் -80 நாள்: 25.02.2020

# அரியலூர் மாவட்டத்தில் பட்டு விவசாயிகளுக்கு ஊக்கபரிசுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், பட்டு வளர்ச்சித்துறையின் சார்பில் பட்டு விவசாயிகளுக்கு ரொக்கப்பரிசுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று **(25.02.2020)** வழங்கினார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தாவது,**

அரியலூர் மாவட்டத்தில் பட்டு வளர்ச்சித்துறையின் சார்பில் மாநில திட்டம், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் சிறந்த மூன்று பட்டு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் ரொக்கப்பரிசு வழங்கி வருகிறது.

அதன் அடிப்படையில், வேம்புக்குடி கிராமத்தைச் சேர்ந்த ஜி.கலியமூர்த்தி என்பவர் 1.5 ஏக்கரில் 575 முட்டைக்கூடுகள் வைத்து, 398 கிலோ பட்டுப்புழுக்கள் வளர்த்து, ரூ.1 இலட்சத்து 44 ஆயிரத்து 632 இலாபம் பெற்றதற்கு முதல் பரிசாக ரூ.25 ஆயிரத்திற்கான காசோலையினையும், நம்மகுணம் கிராமத்தைச் சேர்ந்த அ.செல்லபாண்டியன் என்பவர் 3.5 ஏக்கரில் 675 முட்டைக்கூடுகள் வைத்து, 372 கிலோ பட்டுப்புழுக்கள் வளர்த்து, ரூ.1 இலட்சத்து 22 ஆயிரத்து 681 இலாபம் பெற்றதற்கு இரண்டாம் பரிசாக ரூ.20 ஆயிரத்திற்கான காசோலையினையும், கொடுக்கூர் கிராமத்தைச் சேர்ந்த ம.செல்வகுமார் என்பவர் 4 ஏக்கரில் 525 முட்டைக்கூடுகள் வைத்து, 324 கிலோ பட்டுப்புழுக்கள் வளர்த்து, ரூ.1 இலட்சத்து 13 ஆயிரத்து 567 இலாபம் பெற்றதற்கு முதல் பரிசாக ரூ.15 ஆயிரத்திற்கான காசோலையினையும் வழங்கப்பட்டு, ஊக்குவிக்கப்பட்டது.

இதுபோன்று நமது மாவட்டத்திலுள்ள பட்டுப்புழு வளர்ப்பு விவசாயிகள் அதிக அளவில் பட்டுப்புழுக்களை வளர்த்து மாநில அளவில் பரிசுகளை பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், உதவி ஆய்வாளர் மணிகண்டன், இளநிலை ஆய்வாளர் ஜோதி மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**